கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவில்லிபுத்தூர்.

முன்னிலை – திரு.T.V.**மணி, B.A.**, LL.B.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் நாள் சனிகிழமை

**குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண்.47/2023**

**(CNR.NO.TNVR010056602022)**

| | |
|---|---|
| எந்த நீதிமன்றத்திலிருந்து இந்த மேல்முறையீடு முன்னிடப்பட்டுள்ளது. | நீதித்துறை நடுவர் எண்.1, சிவகாசி |
| கீழமை நீதிமன்றத்தின் வழக்கு எண். | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.54/2018 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் விலாசம் | நூரூல்ஹிதாயாபீவி, வயது 44/2022 த/பெ.தாதாமியான், கதவு எண்.100, சக்கரைவாவா தெரு, சிவகாசி 626 123. |
| எதிர்மேல்முறையீட்டாளர்கள் பெயர் | 1) ந.குலாம்காதர், வயது 52/2022, த/பெ.நசீர் அகமது, 1–30, ராம் நகர், செண்பகத்தோப்பு ரோடு, இராஜபாளையம்.<br><br>2) நசீர் அகமது, வயது 72/2022, த/பெ.யாசின், 1–30, ராம் நகர், செண்பகத்தோப்பு ரோடு, இராஜபாளையம்.<br><br>3) காவல் ஆய்வாளர், அனைத்து மகளிர் காவல் நிலையம் சிவகாசி, குற்ற எண்.10/2009 |
| கீழமை நீதிமன்ற தீர்ப்புரை நாள் | 20.06.2022 |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தண்டனையும் | முடிவில் 1ம் எதிரி 498(A)இ.த.ச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2ம் எதிரி பிரிவு 498(A)இ.த.ச கீழும் குற்றவாளிகள் இல்லை என்று |

| | |
|---|---|
| | முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து கீழமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது |
| கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளதா? உறுதி செய்யப்பட்டுள்ளதா? நீக்கரவு செய்யப்பட்டுள்ளதா அதன் விபரம் | உறுதி செய்யப்பட்டது. முடிவில், இந்த மேல்முறையீடானதை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. சிவகாசி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 20.06.2022 ல் CC.No.54/2018 ல் வழங்கிய தீர்ப்புரை இதன் மூலம் உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |

இந்த மேல்முறையீடானது கடந்த 30.01.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.இராஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.துரைசரவணன் அவர்கள் முன்னிலையாகியும், விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை மற்றும் இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்த பின்னர், மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துபூர்வமான வாதுரைகளை ஆராய்ந்து பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

சிவகாசி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 20.06.2022 ல் CC.No.54/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர்/புகார்தாரரால் இந்த மேல்முறையீடானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

– – – – –

### 2) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

நிகழ்நிலை புகார்தாரர் சிவகாசி, புதிய பள்ளிவாசல் தெருவில் அவரது குழந்தையுடன். பெற்றோர வீட்டில் குடியிருந்து வருகிறார். நிகழ்நிலை புகார்தாரருக்கும். குலாம்காதர் என்பவருக்கும் கடந்த 16.07.2006 ம் தேதியன்று நிக்காஹ் என்ற திருமணம் நடைபெற்றுள்ளது. மேற்படி திருமணத்திற்கு முன்பு நிகழ்நிலை புகார்தாரரின் மாமனார். மாமியார் அவரது மகன் மாதம் ரூ.10,000/–சம்பாதிக்கிறார் என்று நிகழ்நிலை

புகார்தாரரின் பெற்றோரிடம் பொய் கூறியதால் நிகழ்நிலை புகார்தாரரின் பெற்றோர்கள் மேற்படி திருமணத்தின் போது 27 பவுன் தங்க நகைகளும், வரதட்சணையாக ரூ.50,000/-மும் மற்றும் சீதனப்பொருட்கள் அதன் மதிப்பு ரூ.60,000/-ம், மாப்பிள்ளைக்கு 1 பவுன் தங்கமோதிரமும், கடிகாரமும் கொடுத்தார்கள். மேற்படி திருமணத்தின் பின்பு தரப்பினர்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளார்கள். நிகழ்நிலை புகார்தாரரின் கணவர் வேலைக்கு செல்லாமலும், பணம் சம்பாதிக்காமலும் இருந்ததால் தரப்பினர்களுக்குள் சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளது. நிகழ்நிலை புகார்தாரரின் கணவரின் சகோதரிக்கு திருமணம் முடிந்து அவரது கணவர் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால் தரப்பினர்களுடன் குடியிருந்து வருகிற நிகழ்நிலை புகார்தாரரின் கணவர். மாமனார். மாமியார், நாத்தனார் ஆகியோர்கள் மேற்படி குலாம்காதர் தனியாக தொழில் செய்ய வேண்டுமென்றும் ரூ.1.00.000/- வரதட்சனையாக வாங்கி வா இல்லை என்றால் உன்னை வைத்து வாழவிடமாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள்.

1.2 மேற்படி விபரத்தை நிகழ்நிலை புகார்தாரர் அவரது பெற்றோரிடம் கூறிய போது தற்போது நாங்களும் சிரமத்தில் உள்ளோம் என்று தெரிவித்ததால் அன்றிலிருந்து நிகழ்நிலை புகார்தாரருக்கு சரியாக சாப்பாடு கொடுக்காமலும், சிறு சிறு காரணங்களுக்கெல்லாம் கெட்ட வார்த்தைகளால் திட்டி அடித்து துன்புறுத்தியுள்ளார்கள். இந்நிலையில் குலாம்காதர். நிகழ்நிலை புகார்தாரரின் மோதிரங்கள் 3 மொத்த எடை 12 கிராம். திருமணத்தின் போது நிகழ்நிலை புகார்தாரரின் கணவருக்கு போட்ட மோதிரம் 8 கிராம் மொத்தம் 20 கிராம் எடையுள்ள தங்க மோதிரத்தினையும், நிகழ்நிலை புகார்தாரரின் தம்பியிடம் வாங்கிய செல்போனையும் விற்றுள்ளார். நிகழ்நிலை புகார்தாரரின் பெற்றோரிடம் ரூ.5,000/-தொழில் செய்ய வேண்டி பெற்றுள்ளார். நிகழ்நிலை புகார்தாரர். குலாம்காதர்-ன் மேற்படி செயல்கள் குறித்து கேட்ட போது குலாம்காதர் மற்றும் அவரது பெற்றோர்களும் ஒன்றாக சேர்ந்து கொண்டு நாங்கள் கேட்ட பணம் .1,00,000/-யை உனது பெற்றோர்களிடமிருந்து வாங்கி வா என்று நிகழ்நிலை புகார்தாரரை அடித்துள்ளனர். இந்த சங்கதியை நிகழ்நிலை புகார்தாரர் அவரது பெற்றோருக்கு தெரிவித்ததால், அவர்கள் இராஜபாளையம், ஜமாத் தலைவர் இப்ராஹிம்பாபு என்பவரிடம் நடந்த விபரம் குறித்து மனு கொடுத்துள்ளார்கள்.

1.3 ஜமாத் தலைவர் இருவர்களையும் அழைத்து பேசினார்கள், அதற்கு நிகழ்நிலை புகார்தாரரின் கணவர், மாமனார். மாமியார். நாத்தனார் ஆகியோர்கள் ஜமாத்தலைவரின் வார்த்தைக்கு கட்டுப்படாமல் கெட்ட வார்த்தைகளில் உதாசீனப்படுத்தினார்கள். பின்பு ஜமாத்தலைவர் 19.05.2009 தேதி நிகழ்நிலை புகார்தாரரின் தகப்பனாருக்கு லெட்டர்பேடு மூலம் உரிய பதில் கொடுத்தார். அதன்பேரில் மேல்நடவடிக்கை எடுத்துக்கொள்ள சொன்னார். நிகழ்நிலை புகார்தாரர் தன் குடும்ப நிலை குறித்து கூறி வேண்டிய போது மேற்படியார்கள், உங்கள் பெற்றோரிடம்

ரூ.1,00,000/— வாங்கி வந்தால் தான் உன்னை வைத்து வாழ்வோம் இல்லை என்றால் உன்னை வைத்து வாழமாட்டோம் என்று கூறி அடித்து வீட்டைவிட்டு குழந்தையுடன் மூடிவிட்டார்கள். நிகழ்நிலை புகார்தாரரும் அவரது பெற்றோரும் இராஜபாளையம் ஜமாத்திடம் நடந்த விபரத்தை தெரிவித்து, பின் மேற்படியார்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 16.06.2009 அன்று சிவகாசி, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**3)** விசாரணை நீதிமன்றத்தில் வழக்கின் அனைத்து ஆவணங்களும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் போதிய அவகாசம் கொடுத்து 1ம் எதிரி மீதான இ.த.ச சட்டப்பிரிவு 498(A) மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் படியும், 2ம் எதிரி இ.த.ச. சட்டப்பிரிவு 498(A)ன் படியும் குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி கேட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துரைத்தார்கள். எனவே கீழமை நீதிமன்றத்தில் அரசு தரப்பு விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

**4)** விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை, சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**5)** விசாரணை நீதிமன்றம் சாட்சிய விசாரணைக்கு பின்னிட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், 1ம் எதிரி 498(A)இ.த.ச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2ம் எதிரி பிரிவு 498(A)இ.த.ச கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்தும் கீழமை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையை புகார்தாரர்/அ.சா.1 தரப்பில் ஆட்சேபித்து அதனை ரத்து செய்ய கோரி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6) <u>மேல்முறையீட்டு குறிப்பாணையின் சுருக்கம் பின்வருமாறு</u>**

1. கீழமை நீதிமன்றம் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதையும் சரிவர சீர்தூக்கி பார்க்காமல், அவசர கதியில் வழக்கை என்பது தீர்ப்புரையில் இருந்து விசாரித்து உத்திரவிட்டுள்ளது தெள்ளத்தெளிவாக தெரியவருகிறது.

2. அ.சா.1 தனிப்பட்ட முறையில் 302 (2) Cr.P.C. ன் கீழ் மனு தாக்கல் செய்தது பற்றியும், Written Argument சமர்ப்பித்தது பற்றியும் தீர்ப்பில் எந்த ஒரு இடத்திலும் கீழமை நீதிமன்றம் ஆராயவில்லை.

3. அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட citation–பற்றியும் கீழமை நீதிமன்றம் தீர்ப்பில் விளக்கம் கொடுக்கவில்லை.

4. Dowry–ஐ பொறுத்தவரை Demand என்ற வார்த்தைக்கு பதிலாக எந்தவொரு சொல்லும் செயலும் இருந்தால் அது வரதட்சனை கேட்பதாகவும், அதனால் பெண் பாதிக்கப்படுவதாகவும், அரசு தரப்பில் வாதம் செய்யப்பட்டு அதற்குரிய citation–ஆன Jatinderkumar vs State of Haryana என்ற வழக்கில் மேன்பமை பொருந்திய உச்சநீதிமன்றம் தெளிவாக தீர்ப்பளித்துள்ளது. ஷ வழக்கின் சாரம்சங்களை சீர்தூக்கி பார்க்கும்போது கூடுதலாகவோ அல்லது தொழில் ரூ.1.00.000/– கேட்டாலும் அதுவும் வரதட்சனை கொடுமை ஆகும் என தீர்வு கண்டுள்ளது. ஷை கீழமை நீதிமன்றம் உச்சநீதிமன்ற தீர்ப்பின் சரத்துக்களை சீர்தூக்கி பார்க்க தவறிவிட்டது.

5. அ.சா.1–ன் சாட்சியத்தை பொய்ப்பிக்கும் வண்ணம் எந்தவொரு எதிர்வாதமும் எதிரிகள் செய்யவில்லை என்பதையும் கீழமை நீதிமன்றம் சீர்தூக்கி பார்க்கத்தவறிவிட்டது.

6. அ.சா.1. முதல் விசாரணையில் அனைவரும் மீண்டும் ரூபாய் ஒரு லட்சம் கேட்டார்கள். பர்வீன் தன் கணவரை தன் நகையை வைத்து தான் வெளிநாட்டிற்கு அனுப்பியதாகவும், எனவே நான் தான் பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்வார் அளித்துள்ளார். அதனை கீழமை நீதிமன்றம் சரிவர பார்க்கவில்லை. என சாட்சியம்

7. கீழமை நீதிமன்றம் என்ன தொழிலுக்காக ரூ.1,00,000/– கேட்கப்பட்டது என்பது குறித்து அரசு தரப்பில் விளக்கவில்லை என்று தீர்வு கண்டிருப்பதும், சாட்சியங்களை சரியாக பார்க்காமல் ஒரே கண்ணோட்டத்தில் எதிரிகளுக்கு ஆதரவாக விடைகண்டுள்ளதும் தவறாகும்.

8. அ.சா.1 தனது சாட்சியத்தில் தொழில் செய்வதற்கு வரதட்சனை கொண்டுவரும் படி கட்டாயப்படுத்தினார்கள் என்று கூறியுள்ளார். அவரது சாட்சியத்தை மறுத்தளிக்கும் விதமாக எந்தஒரு எதிர்கேள்வியும் எதிரிகள் தரப்பில் கேட்கப்படவில்லை என்பதையும் கீழமை நீதிமன்றம் ஆராயத்தவறிவிட்டது.

9. அ.சா.1 குறுக்கு விசாரணையை 1ம் எதிரி ரூபாய் ஒரு லட்சம் தொழில் செய்வதற்காக கேட்டதாக நான் தான் என் முதல் விசாரணையினும் காவல்துறை விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் "கூடுதல் டவுரி வேண்டும் என்று கேட்டார்கள் என்று தான் சொல்லி உள்ளேன்". என்று தெரிவித்துள்ள நிலையில், இந்த சாட்சியதை பொய்பிக்கும் விதமாக எந்தவொரு எதிர்கேள்வியும். பதிலும் எதிரிகள் தரப்பில் பெறப்படவில்லை என்பதையும் கீழமை நீதிமன்றம் கண்டுணர தவறிவிட்டது.

10. மேலும் எதிரிகள் தரப்பில் அ.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது "நான் காவல்நிலைய விசாரணையில் 1. 2 எதிரிகள் மீது மட்டும் தான்

குற்றச்சாட்டு சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. நான்கு பேர் மீதும் சொல்லி உள்ளேன் என் கணவர். மாமனார். மாமியார் மற்றும் மூத்த நாத்தனார் ஆகியோரை சேர்த்து தான் நான் சொன்னேன்". முதல் தகவல் அறிக்கையும் அந்த நான்கு பேர் மீது தான் பதிவு செய்யப்பட்டது. என தெளிவாக பதில் அளித்துள்ள நிலையில், ஷ நால்வர் மீதும் குற்றச்சாட்டு வனைய கீழ்மை நீதிமன்றம் தவறியதோடு. அவசர கதியில் இப்புகாரில் தீர்வு கண்டுள்ளது தவறாகும். அ.சா.1 மற்றும் அ.சா.2, 3 ஆகிய சாட்சியத்தில் இருந்து 3, 4 எதிரிகள் அ.சா.1 ன் ஆட்சேபணைகள் ஏதும் கேட்காமல் நீக்கம் செய்யப்பட்டதற்கு, அவ்வாறு நீக்கியதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டதற்கும் தகுந்த முகாந்திரம் இருந்தும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள கூடுதல் எதிரிகளை சேர்க்காமல் குறையுடன் வழக்கை கீழமை நீதிமன்றம் தீர்மானித்துள்ளது தவறாகும்.

11. C.C.No.200/2011 விசாரணை இந்த வழக்கிற்கு மறைப்பட்டுள்ளது என கீழ்மை நீதிமன்றம் தீர்வு கண்டிருப்பது சட்டப்படி தவறாகும். C.C.No.200/2011 என்ற வழக்கானது இதே எதிரிகள் மீது வேறுசில குற்ற செயலுக்காக தொடுக்கப்பட்டது என்பதும். அதற்கும் தாவா வழக்கிற்கும் எந்தவொரு அதற்கான defence ஐ எதிரி தரப்பில் சரியான சான்றாவணங்கள் மூலம் சம்மந்தமும் இல்லை என்றும் தெளிவாக அரசு தரப்பில் கூறியபிறகும் நிரூபிக்காமல் தவறியதை கீழமை நீதிமன்றம் வேறு கண்ணோட்டத்தில் கணித்திருப்பது தவறாகும்.

12. 1ம் எதிரி காதில் அடித்து காயம் ஏற்படுத்தியது சம்பந்தமாக காவல்நிலைய புகார் கொடுக்கப்படவில்லை என்ற வாதம் எதிரிகள் தரப்பில் வைக்கப்பட்டாலும் அதற்கு அரசு தரப்பில் அ.சா.1 சரியான முறையில் பதிலளித்துள்ளார். தினசரி ஏதாவது பிரச்சனை செய்து கொண்டே இருப்பார் என்றும் தினமும் காவல்நிலையம் சென்று கொண்டிருக்க முடியாது என்பதால் கொடுக்கவில்லை என்று பதிலளித்து உள்ளார். ஆக எதிரிகள் அ.சா.1 ஐ கொடுமை படுத்தியது உண்மை தான் என்ற விதத்தில் கேள்விகளும் பதிலும் பெற்றுள்ளார்கள் என்பதை கீழமை நீதிமன்றம் சீர்தூக்கி பார்க்க தவறிவிட்டது.

13. ஒரு பாதிக்கப்பட்ட பெண் சேர்ந்து வாழ்க்கை நடத்த இவ்வளவு காலம் கொடுமைகளை பொறுத்து கொண்டிருந்தேன் என்பதையும், எதிரிகள் தான் என்னை கூடுதல் வரதட்சணை கேட்டு அடித்து விரட்டிவிட்டார்கள் என்பதை குறுக்குவிசாரணையில் தெளிவாக கூறியுள்ளார். அதை கீழமை நீதிமன்றம் பார்க்க தவறிவிட்டது.

14. கீழமை நீதிமன்றம் எதிரிகள் ரூ.1,00,000/– ஐ தொழில் செய்ய கேடடார்களா? அல்லது இல்லையா? என்ற கோணத்தில் அணுகிஉள்ளது. அது தவறாகும். எதிரிகள் எந்தவகையில் அ.சா.1 னிடம் பணம் கேட்டாலும் அது கொடுமையே! ஆகும். மேலும் கூடுதல் வரதட்சணை கேட்கப்பட்டது என்பதை அரசு தரப்பில் அ.சா.1 குறுக்கு விசாரணையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்க எதிரிகள் தரப்பில் எடுக்கப்படாத

defense கேள்விகளை நீதிமன்றமே தீர்மானித்திருப்பது ஏற்புடையது அல்ல.

15. எதிரிகள் தரப்பில் கேட்கப்பட்ட suggestion கேள்விகள் அனைத்தும் அரசு தரப்பில் எந்தவொரு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் தீர்வு காணப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளுக்கு அரசு தரப்பில் கொடுக்கப்பட்ட சாட்சியங்கள் சான்றாவணங்கள் பொய் என மறுத்துரைக்காமல் எதிரிகள் தரப்பில் வேறு ஒரு கோணத்தில் வழக்கை அணுகியுள்ளார்கள். கீழமை நீதிமன்றமும் வழக்கை மற்றொரு கோணத்தில் அணுகியது வேதனையாகவும். வியப்பாகவும் உள்ளது.

16. கீழமை நீதிமன்றத்தில் அ.சா.1 அவரது புகார் மனுவில் திருமணத்தின் போது 27 பவுன் தங்க நகைகளும் வரதட்சணையாக 5.50,000/—ரொக்கப்பணமும் 60.000/—மதிப்புள்ள சீதனப்பொருட்களும் 1ம் எதிரிக்கு ஒரு பவுன் தங்க மோதிரமும். கைக்கடிகாரமும் கொடுக்கப்பட்டது எனத்தெரிவித்துள்ள நிலையில். அவ்வாறு வரதட்சணை வழங்கப்பட்டதற்கு ஆதரவாக அ.சா.ஆ.4 ஆவணமானது அ.சா.10 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளதை கீழமை நீதிமன்றம் கண்டுணர தவறிவிட்டது.

17. கீழமை நீதிமன்றமானது அ.சா.ஆ.4 ஆவணத்தைப் பார்க்கும்போது அ.சா.1 தன் சாட்சியத்திலும் புகார்மனுவிலும் சொல்லியுள்ளது போன்றே ஷை பொருட்கள் சீதனமாக கொடுக்கப்பட்டதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் டிமாண்ட் செய்ததாகவோ அல்லது வரதட்சணையாகவோ கொடுக்கப்பட்டதாக அ.சா.ஆ.4 ல் குறிப்பிடப்படவில்லை என்றும்,கண்டிருப்பது முற்றிலும் தவறாகும். அ.சா.ஆ.4 ஆவணமானது பள்ளிவாசலில் வைத்துப் பராமரிக்கப்படும் ஆவணம் என்ற நிலையில் ஷை ஆவணத்தில் மாப்பிள்ளை வீட்டார் டிமாண்ட் செய்து நகைகளையும், பணத்தையும் பெண் வீட்டார் வசமிருந்து பெற்றனர் என்பதையும், திருமணத்தின் போது என குறிப்பிட இயலாது வரதட்சணை மற்றும் சீதனப்பொருட்கள் வழங்கப்பட்ட விபரம் மட்டுமே அதில் இடம் பெறும் என்பதையும் கீழமை நீதிமன்றம் கண்டுணர தவறிவிட்டது.

18. கீழமை நீதிமன்றமானது அ.சா.3, அ.சா.6, அ.சா.7 ஆகியோர்கள் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள் என்றும், அரசு தரப்பில் ஷ கட்சிக்கு அப்பாற்பட்ட தனிநபர் சாட்சிகள் விசாரிக்கவில்லை யாரும் சாட்சியாக விந்தையாகவும். எனத்தெரிவித்திருப்பது வேடிக்கையாகவும் உள்ளது. ஷை சாட்சிகளுக்கு சம்பவம் குறித்து தெரியுமா? தெரியாதா? என்பது குறித்து கீழமை நீதிமன்றம் பரிசீலித்திருக்க வேண்டும். ஆனால் கீழமை நீதிமன்ற பரிசீலிக்க தவறிவிட்டது.

19. கீழமை நீதிமன்றமானது ரூ.5,000/— த்தை தொழில் செய்ய அ.சா.1 இடமிருந்து 1ம் எதிரி பெற்றுள்ளார் என்றும், அதை வைத்து என்னவகை தொழில் முறைக்கு கொடுக்கப்பட்டது என்பது குறித்து அரசு தரப்பில் எந்தசாட்சியமும் இல்லை என்று கீழ்மை நீதிமன்றம் தீர்வுக்கு

வந்தது முற்றிலும் தவறாகும். ஏதாவது காரணத்தைக் கூறி அ.சா.1 ஐ ஏமாற்றி 1ம் எதிரி ரூ.5,000/– பணம் பெற்றுள்ளார் என்பதை கண்டுணர தவறிவிட்டது.

20. எதிரிகள் அ.சா.1 வசம் வரதட்சணை பெற்றுக்கொண்ட விவரமும், அதன்பின் அடிக்கடி பணம் கேட்டு அ.சா.1 குடும்பத்தினர் பணம் பெற்று வருமாறு அ.சா.1 ஐ கொடுமைப்படுத்திய விபரமும், அரசு தரப்பில் சிறிதும் சந்தேகத்திற்கு இடமின்றி தெள்ளத் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளதை கீழமை நீதிமன்றம் சிறிதும் சீர்தூக்கி அவ்வாறு பார்க்கவில்லை. மேலும் எதிரிகள் தரப்பில் அரசு தரப்பு குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கும் வகையில் எவ்வித சாட்சியங்களையோ, இருக்க ஆதாரங்களையோ முன்னிலைப்படுத்தவில்லை. கீழமை நீதிமன்றமே தன்னிச்சையாக எதிரிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு எதிரிகளுக்கு சாதகமாக தீர்வு கண்டு வழங்கியுள்ள தீர்ப்பானது முற்றிலும் தவறாகும். வை எதிரிகள் குற்றவாளிகள் என தெள்ளத்தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் செய்த குற்றங்களுக்கு அதிகபட்ச தண்டணை விதித்திருக்க வேண்டிய கீழமை நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது சட்டப்படி உகந்ததல்ல.

மேலே கண்ட இம்மேல்முறையீட்டை காரணங்களினாலும் அனுமதித்து சிவகாசி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 20.06.2022 ல் CC.No.54/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் பக்கம் வணக்கமாய் பிரார்த்திக்கப்படுகிறது.

**7)** இம்மேல்முறையீட்டினில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்,

1) இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

2) சிவகாசி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 20.06.2022 ல் CC.No.54/2018 ல் வழங்கிய தீர்ப்புரையை ரத்து செய்யப்படத்தக்கதா?

**8)** **<u>பிரச்சனை 1 மற்றும் 2 க்கான தீர்வு</u>**

(8–i) இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில், வாதுரையின் பொழுது சிவகாசி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் கடந்த 20.06.2022 ல் CC.No.54/2018 ல் வழங்கிய தீர்ப்பு முடிவான, 1ம் எதிரி 498(A)இ.த.ச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2ம் எதிரி பிரிவு 498(A)இ.த.ச கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து

கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்தும் பிறப்பிக்கப்பட்டுள்ள மேற்படி தீர்ப்பை எதிர்த்து நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(8–ii) இம்மேல்முறையீட்டில் உள்ள 3ம் எதிர்மனுதாரர்/காவல்துறை ஆய்வாளர் அவர்கள் அனைத்து மகளிர் காவல் நிலையம், சிவகாசி, காவல் நிலையத்திலிருந்து அரசு தரப்பில், 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகளை, சிவகாசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ஆனது கடந்த 20.06.2022 ஆம் தேதியில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.54/2018 ல் வழங்கிய தீர்ப்பில், 1வது எதிர்மேல்முறையீட்டாளர்/1வது எதிரியை இ.த.ச பிரிவுகள் 498(A) மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவு 498(A) கீழும் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து அவர்களைகு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்துள்ளதை ஆட்சேபித்து எந்தவிதமான மேல்முறையீடும், சீராய்வும் தகுந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இம்மேல்முறையீட்டு வாதுரை சமயத்தில் 3வது எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பிலும், கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் ஆஜராகி, விசாரணை நீதிமன்றத்தில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.10 வரையான சாட்சியங்களிலிருந்தும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டிருப்பினும், விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டதன் படி 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்களில் 1வது எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான இ.த.ச பிரிவுகள் 498(A) மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்புச் சட்டத்தின் படியும், 2வது எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான இ.த.ச பிரிவு 498(A) படியும் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதாலும், அந்த வகையில், தீர்ப்புரையை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்படவில்லை, தற்பொழுது இம்மேல்முறையீட்டாளர்/நிகழ்நிலை புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இம்மேல்முறையீட்டிற்கான காரணங்களை பொறுத்து, ஆய்வு

செய்து தகுந்த தீர்ப்புரையை வழங்க வேண்டியும் வாதுரை செய்யப்பட்டது.

(8–iii) இம்மேல்முறையீடு வாதுரை சமயத்தில் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில், மேல்முறையீட்டை தாக்கல் செய்து கொண்டதற்கான காரணத்தையும் வலியுறுத்தி எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. மேலும், வாதுரை சமயத்தில் நிகழ்நிலை புகார்தாரர்/அரசு தரப்பிலும் அ.சா.1 முதல் அ.சா.10 வரையான சாட்சியங்களும் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டது என்றும், எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நிரூபணமாகி உள்ளது என்றும் ஆனாலும் விசாரணை நீதிமன்றமானது குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யவில்லை என்று தீர்வு கண்டு 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகளை விடுதலை செய்துள்ளது சட்டப்படி தவறானது என்றும் ஷை இம்மேல்முறையீட்டை அனுமதித்து, விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையை ரத்து செய்து 1, 2 எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டியும் வாதுரை செய்யப்பட்டது.

(8–iv) மேலும் 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் வாதுரையில் பொழுது, விசாரணை நீதிமன்றத்தில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.10 வரையான சாட்சியங்கள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் மூலம் 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று விசாரணை நீதிமன்றம் தீர்வு கண்டு 1, 2 எதிரிகளை விடுதலை செய்துள்ளதும் சரியானது என்றும் 1, 2 எதிரிகளால் நிகழ்நிலை புகார்தாரருக்கு எந்த வகையிலும் வரதட்சணை கொடுமை மற்றும் துன்புறுத்தல் எதுவும் நடைபெறவில்லை என்றும் மாறாக நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மூலமாக தான் 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகளுக்கு தான்

துன்பங்களும், கஷ்டங்களும் ஏற்பட்டுள்ளது என்றும் நிகழ்நிலை புகார்தாரர், குழந்தையுடன் 1வது எதிரியுடன் சேர்ந்து வாழாமல் இருந்து கொள்ள வேண்டியே பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றும் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யப்பட வேண்டியும், விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையை ஊர்ஜிதம் செய்ய வேண்டியும் வாதுரை செய்யப்பட்டது.

(8–v) மேற்கண்டவாறு இருதரப்பாலும் வாதுரை செய்யப்பட்டதையும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு கோப்புகள் அனைத்தும் ஆராய்ந்து பார்க்கப்பட்டது. விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையும் நன்கு ஆராயப்பட்டது. கடந்த 16.07.2006 ஆம் தேதியன்று நிகழ்நிலை புகார்தாரருக்கும், 1வது எதிரிக்கும் இடையில் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. திருமணத்தின் பொழுது நிகழ்நிலை புகார்தாரருக்கு வழங்கப்பட்ட நகைகள், ரொக்கப்பணம் ஆகியவைகளை வரதட்சணையாக கொடுக்கப்பட்டதாக நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் சொல்லப்பட்டு அதற்கு ஆதரவாக அ.சா.ஆ.4 ஆவணம் என்றும் எடுத்துரைக்கப்படுகிறது. இது தொடர்பாக, எதிரிகள் தரப்பிலும், ஷை நிகழ்நிலை புகார்தாரர் தரப்பிலும் சொல்லப்படுவது போல், வரதட்சணையாக கேட்கவில்லை என்றும் 1, 2 எதிரிகள் தரப்பில் அவ்வாறான நகையும், ரொக்கமும் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவோ, வலியுறுத்தவோ இல்லை என்றும் நிகழ்நிலை புகார்தாரருக்கு அவரது பெற்றோர்கள் அவரது குடும்ப வாழ்க்கைக்கு அவரது சந்தோஷத்திற்கு தான் கொடுத்துள்ளார்கள் தவிர 1, 2 எதிரிகள் மூலமாகவோ அல்லது அவர்கள் தரப்பில் யார் மூலமாகவும் எந்தவித கோரிக்கையும், டிமெண்டும் கிடையாது அவைகள் அனைத்தும் நிகழ்நிலை புகார்தாரரின் திருமணத்திற்காக வழங்கப்பட்ட சீதனப்பொருட்கள் தவிர வரதட்சணையாக கொடுக்கப்பட்டதல்ல என்றும் எடுத்துரைக்கப்படுகிறது. ஆனால், நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் வாதிடும் பொழுது,

வரதட்சணையை பொறுத்தவரை டிமென்டு என்ற வார்த்தைக்கு பதிலாக எந்தவொரு சொல்லும், செயலும் இருந்தால் அது வரதட்சணை கேட்பதாகவும் வழக்கில் உள்ள 1, 2 எதிரிகளும், தொழில் தொடங்கவும், கூடுதலாகவும் தொகை கேட்கப்பட்டதும் வரதட்சணை கொடுமை என்றும் ஆனால் விசாரணை நீதிமன்றம் அதனை சீர்தூக்கி பார்க்கதவறிவிட்டதாகவும் வாதுரை செய்யப்பட்டது.

(8–vi) மேலும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் அ.சா.ஆ.4 ஆவணத்தை சுட்டிக்காட்டி வரதட்சணை கொடுமை என்ற அளவில் வாதிடும் பொழுதும், அ.சா.1 ஆனவர் தன் சாட்சியத்திலும், புகார்மனுவிலும் சொல்லியுள்ளது போன்றே ஷை பொருட்கள் சீதனமாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வரதட்சணையாக கொடுக்கப்பட்டதாக அ.சா.ஆ.4 ல் சொல்லப்படவில்லை என்பதையும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பிலும் ஒப்புக்கொள்ளும் பொழுதும் அ.சா.ஆ.4 ஆவணமானது பள்ளிவாசலில் வைத்து பராமரிக்கப்படும் ஆவணம் என்ற நிலையில் ஷை ஆவணத்தில் மாப்பிள்ளை வீட்டார்டிமென்ட் செய்து நகைகளையும், பணத்தையும், பெண்வீட்டார் வசமிருந்து பெற்றனர் என்பதையும், திருமணத்தின் போது என குறிப்பிட இயலாது என்றும் வரதட்சணை மற்றும் சீதனப்பொருட்கள் வழங்கப்பட்ட விபரம் மட்டுமே குறிப்பிடப்படும் என்று சொல்லும் பொழுது, அ.சா.ஆ.4 ஆவணம் படித்து பார்க்கும் பொழுதும், ஷை பொருட்கள் வரதட்சணையாக வழங்கப்பட்டதாக இல்லை என்றும் சீதனப்பொருட்களாக கொடுக்கப்பட்டதாக உள்ளதாகவே எடுத்துக்கொள்ள முடிகின்றது. இது தொடர்பாக விசாரணை நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்து விடை காணப்பட்டதும் சரியானதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(8–vii) மேலும் அ.சா.3, அ.சா.6, அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுதும், 1, 2 எதிரிகள் வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தினார்கள் என்பதை பொறுத்து

அவர்களால் உறுதிபட சாட்சியம் அளிக்கப்பட்டதாக காணமுடியவில்லை. இது குறித்து விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரையையும் காணும் பொழுது தொழில் தொடங்கும் வகைக்காக பணம் கேட்கப்பட்டதாகவே உள்ளது என்பதையும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் ஒப்புக்கொண்டதிலிருந்து அதனை அ.சா.1, 2 எதிரிகளால் வரதட்சணையாக கேட்டு கொடுமைபடுத்தியதாக எடுத்துக்கொள்ள இயலாது என்று விசாரணை நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதும் சரியானதாகவே உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(8-viii) ஷை அ.சா.3, அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோர்களின் சாட்சியங்களையும், அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்களுடன் ஒரு சேர ஆராய்ந்து பார்க்கும் பொழுது நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் 1, 2 எதிரிகள் ரூ.1,00,000/-யை வரதட்சணையாக கேட்டார்கள் என்றும் புகார் கொடுத்ததாக சொல்லும் பொழுது இது தொடர்பாக ஜமாத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்பதற்கும் அந்த புகாரின் நகலையும், விசாரணை வாக்குமூலத்தையும் பதிவு செய்யவில்லை என்றும் பதிவேடுகள் பராமரிக்கவில்லை என்றும் அ.சா.3, அ.சா.6 மற்றும் அ.சா.7 ன் சாட்சியங்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை என்பதாலும் 1, 2 எதிரிகளால் வரதட்சணை ரூ.1,00,000/- கேட்டுக்கொடுமை படுத்தினார் என்று சொல்லப்படுவதும் ஏற்புடையதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(8-ix) மேலும் வழக்கு கோப்புகள் ஆராய்ந்து பார்க்கும் பொழுது நிகழ்நிலை புகார்தாரர் தனது புகார் மற்றும் போலீசார் விசாரணை மற்றும் அ.சா.1 தனது முதல் விசாரணையின் பொழுதும் எந்த தேதியில், எந்த நேரத்தில் என குறிப்பிட்டு எதிரிகள் கொடுமை செய்துள்ளார்கள் என்பதை பொறுத்து காணமுடியவில்லை. இது குறித்து மறுத்து நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் வாதுரை செய்யப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 319 ன் படி மற்ற எதிரிகளை வழக்கில் சேர்க்க வேண்டும் என்று மனு

கொடுக்கப்பட்டு அந்த மனுவும் இறுதியான விசாரணைக்கு பின்பு விசாரணை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவினை ஆட்சேபித்து நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த சீராய்வு மனுவும் தள்ளுபடியானது என்பதை பொறுத்தும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை.

(8–x) மேலும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுதும் விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையை ஆராய்ந்து பார்க்கும் பொழுதும் நிகழ்நிலை புகார்தாரர் கூறுவது போல், இந்த 1, 2 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1, 2 எதிரிகள் மூலமாக எந்தவிதமான வரதட்சணை கொடுமையும் செய்யப்படவில்லை என்றும் அதனால் தான் விசாரணை நீதிமன்றமானது 1, 2 எதிரிகளை விடுதலை செய்துள்ளதும் வை விடுதலையை ஆட்சேபித்து அரசு தரப்பில் எவ்வித மேல்முறையீடும் செய்யவில்லை என்பதை காணும் பொழுதும் இந்த நிகழ்நிலை புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இந்த மேல்முறையீட்டில் எவ்வித அடிப்படை முகாந்திரம் இல்லை என்பதாலும் மேல்முறையீடும் அனுமதிக்கக் கூடியதாக இல்லை என்றும் விசாரணை நீதிமன்ற தீர்ப்புரை உறுதி செய்யக்கூடியதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்தும் பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவில், நிகழ்நிலை புகார்தாரர் தாக்கல் செய்துள்ள இம்மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், சிவகாசி, ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.54/2018 ல் கடந்த 20.06.2022 ல் வழங்கிய தீர்ப்புரை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச்

மாதம் 7 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய _பகரப்பட்டது.

T V MANI Digitally signed by T V MANI
Date: 2026.03.07 16:50:13 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**திருவில்லிபுத்தூர்.**

<u>நகல்:–</u>

நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், சிவகாசி.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
திருவில்லிபுத்தூர்
கு.மே.வ.எண்.47/2023
சீரான/வரைவு – தீர்ப்புரை
07.03.2026

CA.No.47/2023 - AFT - Judgment Dated: 07.03.2026

Judgment is pronounced. As a result, the Criminal Appeal No.47/2023 is preferred by the Defacto Complainant/Appellant is hereby Dismissed. And the Judgment passed in CC.No.54/2018, dated 20.06.2022 by the Judicial Magistrate No.1 Court, Sivakasi is hereby confirmed.

Additional District and Sessions Judge,
Srivilliputhur.